ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1444/20 - 2006 මැයි 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.05.11

1444/20 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண சபை

*ஊவா மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஊவா மாகாண சபையின் ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஊவா மாகாண சபையால் 2003, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியன்று சம்மதிக்கப்பட்ட 2003, திசெம்பர் 18 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னோடியான நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. டி. சிறிசேன,<br>Sசபைச் செயலாளர்,<br>ஊவா மாகாண சபை.

மாகாண சபைச் செயலகம்,<br>ஊவா மாகாண சபை,<br>இராஜ வீதி,<br>பதுளை,<br>2006,மே 03

### ஊவா மாகாண சபையின் ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டம்

ஊவா மாகாணத்தின் வறுமை நிலைக்கு நிவாரணமளிப்பதற்காகவும், கல்வி அல்லது அறிவாற்றலை மேன்மைப் படுத்துவதற்காகவும், சமய நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காகவும், மாகாணத்தில் சேவைகளை ஆற்றியுள்ளவர்களைப் பாராட்டுவதற்காகவும், ஊவா மாகாணத்தில் விளையாட்டுத் துறையினை முன்னேற்றவும், ஊவா மாகாணத்தின் பொது மக்களின் நலன்களுக்கும், வேறு நடவடிக்கைகளுக்கும் என நிதியை வழங்குவதற்காகவுமென ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் எனப்படும் நிதியம் ஒன்றினை ஏற்படுத்தவும், அத்தோடு சம்பந்தப்பட்ட அல்லது இயைபான நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகின்றது ;-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நிதியச்சட்டமானது, 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படும். அதற்கு ஆளுநர் அங்கீகாரம் வழங்கிய திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆளுநரின் நிதியமொன்றினைத் தாபித்தல்.

2. (1) இங்கு இதன் பின்னர் 'நிதியம்' எனக் குறிப்பிடப்படுகின்ற ஊவா மாகாண 'ஆளுநரின் நிதியம்' எனக் குறிப்பிடப்படும் நிதியமொன்று தாபிக்கப்படும்.

(2) ஓராம் உப பிரிவின்படி நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் இந்நிதியமானது இடையறா வழியுரிமையும், பொது இலட்சினையும் கொண்ட ஒரு அமைப்பாகவிருத்தல் வேண்டும். மேலும் இப் பெயரில் வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என்பதுடன் நிதியத்திற்கு எதிராகவும் வழக்குகள் தாக்கல் செய்யவும் முடியும்.

நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை

3. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் கட்டுப்பாடு என்பன இங்கு இதன் பின்னர் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுச் சபைக்குரித்தாகும்.

(2) இங்கு இதன் பின்னர் 'சபை' எனக் குறிப்பிடப்படுகின்ற நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை கீழ் குறிப்பிடப்படுகின்றவர்களை உட்கொண்டதாக இருத்தல் வேண்டும்:-

(அ) ஊவா மாகாணத்தின் ஆளுநர்,
(ஆ) ஊவா மாகாணத்தின் முதலமைச்சர்,
(இ) ஊவா மாகாண சபையின் தவிசாளர்.
(ஈ) ஊவா மாகாண சபையின் எதிர்க் கட்சியின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.
(உ) ஊவா மாகாணத்தின் தலைமைச் செயலாளர்,
(ஊ) ஊவா மாகாணத்தின் ஆளுநரின் செயலாளர்.
(எ) ஊவா மாகாணத்தின் ஆளுநரினால் நியமிக்கப்படக் கூடியவரும், ஆளுநரினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் நியமனக் கடிதத்தில் ஒவ்வொருவராலும் (3) ஆம் (4) ஆம் பிரிவுகளின் விதிமுறைகளுக்கமைவாக பதவிகளை வகிக்க வேண்டுமென்பதுடன், வேறு மூன்று உறுப்பினர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். அவர்களில் ஒரவர் கணக்காளராகவும் மற்றுமொருவர் வழக்கறிஞராகவுமிருத்தல் வேண்டும்.

(3) ஆளுநரினால் (2) ஆம் உப பிரிவின் (உ) பந்தியின் கீழ் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரொருவரின் நியமனத்தினை அவ் உப பிரிவின் (உ) பந்தியின் கீழ் அவர் தம் விருப்பத்தின் பேரில் நிராகரிக்கலாம்.

(4) (2) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் எந்தவொரு உறுப்பினரும், தாம் பதவியில் இருந்து நீங்கிக் கொள்வதாக எழுத்தில் ஆளுநர் அவர்களுக்கு அறிவிப்பதன் மூலம் எச்சந்தர்ப்பத்திலும் சபையிலிருந்து விலகிக்கொள்ள முடியும்

(5) சபையின் கூட்டங்கள், அக் கூட்டங்களின் நடைமுறைகள் பற்றிய நடைமுறை விதிகளை சபையினால் சட்டபூர்வமாக்கிக் கொள்ளலாம்.

(6) சபையின் உறுப்பினர்களிடையே, வெற்றிடம் ஏதும் இருப்பதனால் அல்லது உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் குறைபாடுகள் இருப்பதனால் சபையின் எந்தவொரு நடவடிக்கையும், செயலும் செல்லுபடியற்றதாகவியலாது.

(7) ஆளுநர் சபையின் தவிசாளராயிருத்தல் வேண்டும்.

4. நிதியத்தினை நிர்வகிக்கும் போது, நிதியத்தின் பெயரில் கீழ்க்குறிப்பிடப்படுகின்ற தத்துவங்களை சபை கொண்டிருக்கும் :-

(அ) சபையின் அசையும், அசையா சொத்துக்களை பெற்றுக்கொள்ளல், வைத்திருத்தலுக்கான தத்துவங்களை நிருவகித்தல்.

(ஆ) சபைக்குரித்தான அசையும், அசையா சொத்துக்கள் எதனையும் விற்றல், ஈடு வைத்தல், பரிமாற்றம் செய்து கொள்ளல் அல்லது கையுதிர்த்தல் அல்லது அச் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(இ) இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்துக் கருமங்களை மேற்கொள்ளவும் அதிகாரம் உள்ளதாயிருத்தல் வேண்டும்.

ஆளுநரின் நிதியத்தின் கணக்கு

5. (1) 'ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்' எனக் குறிப்பிடப்படுகின்ற கணக்கொன்றினை அரச வங்கியொன்றில் சபையால் நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்லல் வேண்டும். நியதிச் சட்டம் செயற்பட தொடங்கிய திகதியின் பின்னர் நிதியத்திற்குக் கிடைக்கப்பெறும் நிதிகளை கணக்கில் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு :

(அ) கொடுப்பனவுகள், கொடைகள், நன்கொடைகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி,

(ஆ) மாகாண சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்ற நிதி.

(இ) வேறு வழிகளில், அதாவது, இந் நாட்டில் சட்டபூர்வமாக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து கிடைக்கப்பெறத்தக்கதான நிதி.

நிதியத்தின் நிதியினை பிரயோகிக்கப்படக் கூடிய கருமங்கள்.

6. நிதியத்திற்குரிய நிதியை சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம் :

(1) ஊவா மாகாணத்தின வறுமைநிலைக்கு நிவாரணமளிப்பதற்காக,

(2) ஊவா மாகாணத்தினுள் கல்வியினை அல்லது அறிவாற்றலை மேன்மைப்படுத்துவதற்காக.

(3) ஊவா மாகாணத்தினுள் சமய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அல்லது சமய அனுஷ்டானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு.

(4) ஊவா மாகாணத்திற்கென பெரும் சேவைகளை ஆற்றியோருக்கு கொடைகளை வழங்குவதற்காக.

(5) ஆளுநரினதும், சபையினதும் விருப்பத்திற்கமைய ஊவா மாகாணத்தின் பொது மக்களின் நலன்களுக்கும், நல்வாழ்விற்குமான வேறு பணிகளை மேற்கொள்வதற்காக.

(6) ஊவா மாகாணத்தின் விளையாட்டுக்கள், ஓவியம், நடனம், இசை என்பவற்றை மேம்படுத்துவதற்காக, ஆளுநரின் கட்டளைப்படி பிரயோகப்படுத்துவதற்கு சபை பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

நிதியத்திற்குரித்தான நிதிகளை முதலீடு செய்தல்.

7. நிதியத்திற்குரித்தான ஏதும் நிதிகளை ஆளுநரினால் வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கமைவாக சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம், சபையினால் முதலீடு செய்தல் இயலும்.

நிதியத்தின் உத்தியோகத்தர் களும் ஊழியர்களும்.

8. ஆளுநரின் கட்டளைக்கமைவாக சபைக்கு :

(1) நிதியத்தின் நடவடிக்கைகளை நிருவகிக்கவும், முகாமைத்துவம் செய்யவும் தேவையான உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் நியமனம் செய்வதற்கு,

(2) அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்குமான வேதனங்களை தீர்மானிப்பதற்கு,

(3) அவ்வாறான வேதனங்களையும், நிதியத்தின் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற சகல செலவுகளையும் நிதியத்தின் வருமானத்திலிருந்து செலுத்துவதற்கு அதிகாரமிருத்தல் வேண்டும்.

கணக்கு பரிசோதனையும், கணக்குகளும்.

9. (1) நிதியத்தின் வரவுகள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் பதிவுகளைப் பேணவும், வருடாந்த கணக்கறிக்கைகளை தயாரிக்கவும், சபையினால் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) கணக்காளர் நாயகத்தினால் வருடந்தோறும் நிதியத்தின் கணக்குகள், பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். அக்கணக்குப் பரிசோதனைகளுக்காக தகமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரின் சேவையினை கணக்காய்வு நாயகம் பெற்றுக்கொள்ளலாம், என்பதுடன், அக்கணக்காய்வாளர், கணக்காய்வு நாயகத்தின் வழி

காட்டலிலும், கட்டுப்பாட்டின் கீழும் கடமையாற்ற வேண்டும். அக் கணக்காய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கையினை கணக்காய்வாளர் நாயகம் மாகாணத்தின் ஆளுநருக்கு வழங்கவேண்டுமென்பதுடன், மாகாண ஆளுநர் அவ்வறிக்கையினை மாகாண சபைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) நிதியத்தின் கணக்குகளை பரிசோதனை செய்வதற்காக கணக்காய்வு நாயகத்திற்கு ஏற்பட்ட செலவினங்களை நிரப்பு செய்தலுக்காக, சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற நிதியத்தின் வருமானத்திலிருந்து கணக்காய்வு நாயகத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப் பந்தியில் தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்பது :

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினது அல்லது சட்டபூர்வமாக நிறுவப்பட்ட வேறு ஏதும் நிறுவனத்தினது உறுப்பினராயிருப்பவர், கணக்காளர் ஒருவராக தொழில் புரிவதற்கு அந் நிறுவனத்தின் சபையின் சான்றுப்பத்திரம் கொண்டுள்ளவரொருவராக, காணப்படும் ஒருவர் அல்லது,

(ஆ) ஒவ்வொரு வதிவிடப் பங்காளர்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினது அல்லது சட்டபூர்வமாக நிறுவப்பட்ட வேறு ஏதும் நிறுவனத்தின் உறுப்பினரும், கணக்காளரொருவராக தொழில் புரிவதற்கு அந்நிறுவனத்தின் சபையின் சான்றுப்பத்திரம் கொண்டுள்ளவரொருவராக, காணப்படும் ஒருவர் அல்லது வதிவிட பங்குதாரர்களைக் கொண்டுள்ள பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் என பொருள்படும்.

விதிகளை இயற்றுவதற்கு சபைக்குள்ள தத்துவம்.

10. சபையின் அதிகாரங்கள், கருமங்கள், செயற்பாடுகளை பிரயோகித்தல், ஆற்றுதல், நிறைவேற்றுதல் தொடர்பான அல்லது இடைநேர் விளைவான விடயங்கள் ஏதும் தொடர்பாக தேவையெனக் கருதக்கூடிய விதிகளை சபை இயற்றிக் கொள்ளல் முடியும்.

கருத்துக் கோடல்.

11. இந் நியதிச் சட்டத்தில் 'அரச வங்கி' என்பது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஊவா அபிவிருத்தி வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருள்படும்.

5-407

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.